O.S. No.7/2019

01.08.2023

**வா.சா. 1**

**திருமதி ரஜபுன்னிஷா**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில்)**

வழக்குரை சங்கதிகள் எனக்கு தெரியும். வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள உறவு முறைகள் அனைத்தும் சரியானதுதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்கையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். இந்த சொத்து சம்மந்தமாக எங்கள் மத வழக்கப்படி ஜமாத்தில் சமாதானம் எதுவும் பேசப்பட்டதா என்றால் இல்லை. 2014 ஆகஸ்ட் மாதத்தில் என் கணவர் இந்தியாவில் இருந்தாரா என்றால் சரியாக ஞாபகமில்லை, என் கணவரின் பாஸ்போர்ட்டை பார்த்தால்தான் தெரியும். 30.08.2014 அன்று என் கணவர் நாங்கள் சார்ந்திருக்கும் ஜமாத்திற்கு கடிதம் எதுவும் கொடுக்கவில்லை. 30.08.2014 அன்று என் கணவர் குடும்ப சொத்துக்களை பிரித்து கொடுக்க தனக்கு ஆட்சேபனை இல்லை என்று ஜமாத்திற்கு கடிதம் ஒன்று

கொடுத்துள்ளார் என்றால் இல்லை. என் மாமனாருக்கு சிங்கப்பூரில் அசையா சொத்து உள்ளது என்றால் சரிதான். என் கணவர் கொடுத்த கடிதத்தின் அடிப்படையில்தான் நானும் 1 முதல் 4 பிரதிவாதிகள் சார்ந்திருக்கும் ஜமாத்தில் எங்கள் மத வழக்கப்படி ஒரு பாகப் பிரிவினை ஏற்பட்டது என்றால் இல்லை. கூத்தாநல்லூரில் உள்ள நிஷா திருமண மண்டபம் என்னுடைய பராமரிப்பில் உள்ளது என்றால் இல்லை. பொது பராமரிப்பில் உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள போர்ட் நிஷா திருமண மண்டபத்தின் முன்புறம் உள்ள போர்ட் என்றும் அதில் மண்டப உரிமையாளர் என ரசூல்தீன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நாங்கள் தனிப்பட்ட முறையில் அவ்வாறு போடவில்லை. எங்கள் மாமனார் காலத்திலிருந்தே அவ்வாறு உள்ளது. மேற்படி போட்டோ மற்றும் அதற்கான சி.டி. **பி.சா.ஆ.1** (வாதி தரப்பு வழக்கறிஞர் எதிர் வழக்குரையில் மேற்படி சங்கதிகள் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என ஆட்சேபனை செய்து ஆட்சேபனைக்கு உட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது). நிஷா திருமண மண்டபம் யாருடைய மேற்பார்வையில் உள்ளது என்றால் முகமது கஸ்ஸாலின் அண்ணன் வசம் உள்ளது. நிஷா திருமண மண்டபம் முகமது கஸ்ஸாலின்

அண்ணன் வசம் உள்ளதாக வழக்குரையில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். மற்ற சொத்துக்கள் கூட்டனுபவத்தில் உள்ளதை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பாப்பையன் தோப்பு என்ற இடத்திலிருந்து ரூ.2,00,000/- மதிப்புள்ள மரங்களை நாங்கள் வெட்டி விற்றுள்ளோம் என்றால் இல்லை, அது பொதுவான அனுபவத்தில்தான் உள்ளது. ஜமாத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினைபடி பாப்பையன் தோப்பானது E ஷெட்டியூல் சொத்தாக என் கணவருக்கு ஒதுக்கப்பட்டு அதனடிப்படையில் அதிலிருந்த மரங்களை வெட்டி விற்றுள்ளோம் என்றால் இல்லை. ஜமாத்தில் ஏற்பட்ட பாகப் பிரிவினையின் அடிப்படையில் அவரவர் சொத்துக்கள் அவரவர்களுக்கு தனித்த அனுபவத்தில் உள்ளது என்றால் இல்லை, பொது அனுபவத்தில் உள்ளது. ஜமாத்தில் ஏற்பட்ட தீர்மானத்தில் கையெழுத்து போடாமல் என் கணவர் வெளிநாடு சென்று விட்டதால் அதை சாதகமாக்கி பல சொத்துக்களை சேர்க்காமல் இந்த தாவாவை போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. ஜமாத்தின் தீர்மானத்தின்படி எங்கள் சொத்துக்களை தனித்து அனுபவித்து வந்தோம் என்றும் மற்றவர்கள் சொத்துக்களை அனுபவிக்க விடாமல் இடையூறு செய்து வந்தோம் என்றால்ள சரியல்ல. ஜமாத்தில் சொத்து குறித்து பிரிவினை எதுவும் செய்யவில்லை.

ஜமாத்தில் ஏற்பட்ட தீர்மானத்தின்படி ஷெட்டியூல் A, B, C.D என சொத்துக்கள் 1 முதல் 4 பிரதிவாதிகள் வசம் உள்ளது என்றால் சரியல்ல. ஜமாத்தின் தீர்மானத்தின்படி சொத்துக்களை 1 முதல் 4 பிரதிவாதிகள் அனுபவிக்க விடாமல் நானும் என் கணவரும் பல்வேறு மனுக்களை கொடுத்து தொல்லை செய்து வந்தோம் என்றால் இல்லை. இந்த விபரங்களை மறைக்க முடியாது என்பதால்தான் என் கணவர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் என்னை ஆஜராகி சாட்சியம் அளிக்க சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சாட்சி மட்டும்தான் என்றும் வழக்கு விபரங்கள் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் என் கணவரின் மனைவி, என் மாமனாரும் என் அப்பாவும் திருமணத்திற்கு முன்பே நண்பர்கள் மற்றும் உறவினர்கள். அதனால் வழக்கு விபரங்கள் தெரியும். என் கணவருக்கு வாய் பேச முடியாது மற்றும் காது கேட்காது என்பதால் அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் பல்வேறு சொத்துக்களை விட்டுவிட்டு பாகப் பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் அந்த சொத்துக்களை வழக்கு சொத்தாக சேர்க்கும் பட்சத்தில் பாகப் பிரிவினை பரிகாரம் வழங்க பிரதிவாதிக்கு ஆட்சேபனை இல்லையென்றால் எங்களுக்கு தெரிந்தவரை உள்ள சொத்து விபரங்களை வழக்கில் சேர்த்துள்ளோம். பிரதிவாதிகளுக்கு சொத்து விபரங்கள்

இருந்தால் சேர்க்கலாம். வழக்கை காலதாமதம் செய்வதற்காக பல சொத்துக்களை வேண்டுமென்றே விட்டுவிட்டு தெரிந்தவரை உள்ள சொத்துக்களை வழக்கில் சேர்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் வாரிசுரிமைப்படி தாவா சொத்தில் பாகம் உண்டு என்றால் சரியல்ல.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

M SHANTHI

Digitally signed by M SHANTHI
DN: cn=M SHANTHI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2023.08.01 17:03:17 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.